# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை


## 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2015.03.30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# சேர்பெறுமதி வரி (திருத்தம்)

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 23.00 தபாற் செலவு : ரூபா 20.00

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, வீதத்தை 11 சதவீதத்துக்குக் குறைப்பதனை உட்புகுத்துவதற்கும், கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப்பகுதியின்போது மட்டுமே எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரியின்கீழான செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றின் மூலம் பின்போடுதலை மட்டுப்படுத்துவதற்குமாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, 3 மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கான மொத்தமான மொத்த விற்பனை வரவு 100 மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை வியாபாரத்தின் மீதான பொறுப்பை நீடிப்பதாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், குத்தகை முடிவுற்றதன்மேல் பிரதிபயனில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனையை அவற்றுக்காக ஏற்பாடு செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 5*** : இவ்வாசகம், எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித் திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யும் அலுவலகத்தின் பதிவை நீடிப்பதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 6*** : இவ்வாசகம், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட புதிதாகப் பெறப்பட்ட பாலின் மீதான கருத்திட்ட வரிப் பொறுப்பை அகற்றுவதற்கென முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 7*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, பதிவுக்காக உட்பட்ட தொடக்க நிலையை நீடிப்பதுமாகும்.

***வாசகம் 8*** : இவ்வாசகம், மாதாந்த அடிப்படையில் நாளதுவரையாக்கப்படக்கூடிய செயலூக்க மற்ற கோப்புகளை உண்ணாட்டரசிறையின் அலுவலக முறையான இணையத்தளத்தில் வெளியிடுவ தற்காக ஏற்பாடு செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 9*** : இவ்வாசகம், சட்டத்தின் 16 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகவிருப்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 10*** : இவ்வாசகம், சட்டத்தின் 16 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகவிருப்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 11*** : இவ்வாசகம், சட்டத்தின் 16 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகவிருப்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 12*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, நிதிசார் திரட்டுகைச் செய்முறையின் ஏற்புடை மைக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் வழிகாட்டு நெறிகள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

***வாசகம் 13*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துகின்றதுடன், பதிவுத் தொடக்க நிலையினால் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந் தன்மையினதாகும்.

***வாசகம் 14*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துகின்றதுடன், வீதத்தை 11 சதவீதத்துக்குக் குறைப்பதற்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 15*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, குத்தகைக் கொடுக்கல் வாங்கல்களை நிதிசார் சேவைகள்மீதான சேர்பெறுமதி வரிக்கு உட்பட்டனவாகக் கொண்டு வருவதாகும்.

***வாசகம் 16*** : இவ்வாசகம், இலத்திரனியல் தொடர்பை அல்லது இலத்திரனியற் பதிவேடுகளைப் பயன்படுத்துவதற்காக ஏற்பாடு செய்வதற்குப் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது.

***வாசகம் 17, 18, 19, 20, 21, 22 மற்றும் 23*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 26, 28, 34, 41, 44 மற்றும் 66 என்னும் பிரிவுகளைத் திருத்துகின்றன என்பதுடன், இச்சட்டத்தின் 16 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தமையினதாகும்.

***வாசகம் 24*** : இவ்வாசகம், ''வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணக்கத்தைப் பதிலீடு செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 25*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் அட்டவணையின் II ஆம் பாகத்துக்குக் குறித்தசில விலக்களிப்புகளை உட்புகுத்துவதற்கு அவ்வட்டவணையைத் திருத்துகின்றது.

***வாசகம் 26*** : இவ்வாசகம், கூடுதலான தெளிவுபடுத்துகைக்காக, 2014 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தைத் திருத்துகின்றது.

*ச.வ.ஒ. 16/2015*

### *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், குறித்தசில ஏற்பாடுகள் எத்தேதியன்று நடைமுறைக்கு வரவேண்டுமோ அத்தேதி அத்தகைய பிரிவுகளிற் குறித்துரைக்கப்பட்டாலொழிய, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக் கமைய, 2015, சனவரி 1ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 17, 19, 21, 25அ(5), 26, 28, 34, 41, 44, 47 மற்றும் 66ஆம் பிரிவுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (V) ஆம் உட்பந்தியின் (iii) ஆம் விடயத்தில் “(iii) 2010, நவம்பர் 23 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும்”, என்பதிலிருந்து தொடங்கி “(இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்).” என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(iii) 2010, நவம்பர் 23 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும், 2010, திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கும், 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதும், 2014, திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும் சைபர் வீதப்படி வரி இறுக்கப்படற்பாலனவான பண்டங்கள் அல்லது சேவைகள் தவிர, வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியின்மீது பன்னிரெண்டு சதவீதப்படி (இதில் வரிப் பின்னம் 3/28 ஆகும்); அத்துடன்

(iv) 2015,சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக் குச் சைபர் வீதப்படி வரி இறுக்கப்படற்பாலன வான பண்டங்கள் அல்லது சேவைகள் தவிர, வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியின்மீது பதினொரு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 11/111 ஆகும்)."; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் உட்பந்தியின் (vi) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

"(vi) கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட வழங்கல் களாக அத்தகைய வழங்கல்கள் இருக்குமள வுக்கு, கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப் பகுதியின்போது, எளிமையாக்கபட்ட சேர்பெறு

மதி வரித் திட்டத்திற்காகப் பதிவு செய்யப்பட்ட ஆட்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படுமிடத்து, முதலாம் அட்டவணையின் IIஆம் பாகத்தின் (ஊ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறாக, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3ஆம் பிரிவின்(4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் உட்பட, இச்சட்டத்தின் 22ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆள்;".

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் உட்பந்தியில் "வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையிற் குறித்துரைக்கப்படுகின்றவையுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தமானியில் வெளியிடப்படுகின்றவையுமான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாவது காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன்மூலமும்:-

"(ii) இச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட பண்டங்களாகவுள்ள, அத்தகைய கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப்பகுதியின்போது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்படி 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அங்கீகரிக்கப்

பட்ட செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் உட்பட, 22 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் பதிவுசெய்யப் பட்ட ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட எவை யேனும் பண்டங்கள்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் ''இப்பிரிவின் முற்போந்த'' என்னும் சொற்களிலிருந்து "ஏதேனும் பங்காண்மையினால்" என்னும் சொற்கள்வரை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(ஊ) இப்பிரிவின் முற்போந்த பந்திகளின் கீழான வழங்குகைகளும் முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின்கீழ் விலக்களிக்கப்பட்ட எவை யேனும் வழங்குகைகளும் உட்பட,

(i) 2013, சனவரி 1 ஆம் தேதியன்று அல் லது அதன் பின்னர் தொடங்குகின்ற, ஆனால் 2013, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப் பகுதிக்குள் அடங்குகின்ற அத்தகைய ஏதேனும் மூன்றுமாதகாலப்பகுதிக்கு, ஐந்நூறு மில்லியன் ரூபாவுக்கு;

(ii) 2014, சனவரி 1 ஆம் தேதியன்று அல் லது அதன்பின்னர் தொடங்குகின்ற, ஆனால் 2014, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்

பகுதிக்குள் அடங்குகின்ற அத்தகைய ஏதேனும் மூன்று மாத காலப்பகுதிக்கு, இருநூற்றைம்பது மில்லியன் ரூபாவுக்கு; அத்துடன்

(iii) *2015, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதியினுள் அடங்குகின்ற அத்தகைய ஏதேனும் மூன்று மாத காலப்பகுதிக்கு, நூறு மில்லியன் ரூபாவுக்கு,*

*குறையாமல் ஏதேனும் பஞ்சாங்க ஆண்டில் மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் தொடர்ச்சியான காலப்பகுதிக்குப் பண்டங்களின் மொத்த வழங்கல்களைக் கொண்டுள்ள எவரேனும் ஆளினால் அல்லது ஒரு பங்காண்மையினால்;";*

(2) *அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (i) ஆம் பந்தியில் "இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக" என்னும் சொற்களுக்குப்பதிலாக "இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக எவரேனும் பணிப்பாளர் அல்லது பங்காளர் எந்த வேறு தொழிலில் அல்லது தொழில்களில் பணிப்பாளரொருவராக அல்லது பங்காளரொருவராக உள்ளாரோ அத்தகைய வேறு தொழில் அல்லது தொழில்கள்; அத்துடன்".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(10) (அ) *2015,சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு, ஒரு குத்தகை உடன்படிக்கையின் மொத்தப் பிரதிபயனின் பத்துச் சதவீதத்தை விஞ்சாத பிரதிபயனுக்காக அத்தகைய உடன்படிக்கை முடிவுறுவதன்மேல்*

குத்தகை உடன்படிக்கையின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள் குத்தகைப் பெறுநருக்குப் பின்னர் கைமாற்றப்படுமிடத்து, அத்தகைய பிரதிபயன், அத்தகைய உடன்படிக்கையின் கீழ் அறவிடப்பட்ட குத்தகைவாடகையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன் அத்தகைய பிரதிபயன், குத்தகை உடன்படிக்கையின் மொத்தப் பிரதிபயனின் பத்துச் சதவீதத்துக்கு மேற்பட்டதாகவிருக்குமிடத்து, அத்தகைய வழங்கல் தனிவேறான வழங்கலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) 2015, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு, ஒரு குத்தகை உடன்படிக்கையின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள் பிரதிபயனொன்றுக்காக அத்தகைய உடன்படிக்கை முடிவுறுவதன்மேல் குத்தகைபெறுநருக்குப் பின்னர் கைமாற்றப்படுமிடத்து, குத்தகை உடன்படிக்கையின் மொத்தப் பிரதிபயன் ஒரு குத்தகை வாடகையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (vii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(vii) விடயத்திற்கேற்ப, 1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, புடைவைப் பங்கீட்டுச் சபைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புடைவைப் பங்கீட்டுச் சபையுடன் அல்லது எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித்திட்டத்தின் கீழ்,பதிவு செய்யப்பட்ட தைத்த ஆடைக் கொள்வனவு அலுவலகத்

தினால் கடல் கடந்த கொள்வனவுகாரர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்கான கொடுப்பனவு, இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுமிடத்து, அத்தகைய சேவைகள் அத்தகைய கடல்கடந்த கொள்வனவுகாரர்களுக்குத் தைத்த ஆடைகளை ஏற்றுமதி செய்வதனை வசதிப்படுத்துவதற்கு அத்தியாவசியமாகவுள்ள சேவைகளாக உள்ளன வென ஆணையாளர் தலைமையதிபதியினால் இனங்காணப்படும் அளவுக்கு, அச்சேவைகளை வழங்குதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

"ஆயின், இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (ஊ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், பின்வருவனவற்றின் வழங்கு கையினது பெறுமதி தவிர, அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் பண்டங்களினது மொத்த வழங்குகையின் பெறுமதியினது இருபத்தைந்து சதவீதத்துக்கு விஞ்சுதலாக வுள்ள நேரடியாக அல்லது வேறெவரேனுமாளின் சார்பில் செய்யப்பட்ட இச்சட்டத்தின்கீழ் விலக்களிக்கப்பட்ட பண்டங் களின் வழங்குகையினது பெறுமதி-

(அ) சைபர் வீதமிடப்பட்ட பொருட்கள்;

(ஆ) உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட உடன் பெறப் பட்ட பால் ; அத்துடன்

(இ) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தில் அடங்கி யுள்ள ஏற்பாடு எவ்வாறிருப்பினும், வழங்கலானது

இறக்குமதியாளரினாலேயே செய்யப்படுமிடத்து, விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுக்கமைய, பண்டங்களின் அத்தகைய வழங்குகையின் பெறுமதி,

அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆள் பொறுப்பாகவுள்ள வழங்குகைகளாகக் கொள்ளப்படுவதாகக் கருதப்படுதலும் வரியுட்பட்ட பிரதிபயன் மீதான வரிப் பின்னத்தைப் பயன்படுத்தி இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் வரி விதிக்கப்படற்பாலதாதலும் வேண்டும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்:-

(i) பந்தி (iii) இல்,"(iii) 2013, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(iii) 2013, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2015, சனவரி 1 ஆந் தேதிக்குமுன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ii) பந்தி (iii) யை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(iv) 2015, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர், இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும்-

(அ) விடயத்திற்கேற்ப, ஒரு மாத அல்லது மூன்று மாத வரிவிதிக்கப்படற்பாலதான ஏதேனும் காலப்பகுதியின் முடிவில், விடயத்திற்கேற்ப,ஒருமாத அல்லது மூன்றுமாத வரிவிதிக்கப்படற்பாலதான அக்காலப் பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளினது பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி மூன்று மில்லியன் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவாகவிருப்பின்; அல்லது

(ஆ) அப்போது முடிவடையும் பன்னிரெண்டு மாதகாலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளினது பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, அடுத்து வரும் ஒருமாத அல்லது மூன்று மாத வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் அத்தகைய ஆளினது பண்டங்களின் அல்லது சேவை

களின் அல்லது பண்டங்களின தும் சேவைகளினதும் வரிவிதிக் கப்படற்பாலதான வழங்கல் களின் மொத்தப் பெறுமதி மூன்று மில்லியன் ஏழு இலட் சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியமுள்ள தென அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டுமாத காலப்பகு தியில் பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்திய முள்ளதென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவ தற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண் டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "இருநூற்றைம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவிராதிருந்தாலொ ழிய," என்னும் சொற்களுக்குப் பதிலாக-

"(அ) 2013, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2013, டிசெம்பர் 31ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகு தியினுள் வருகின்ற அத்தகைய ஏதேனும் மூன்றுமாத காலப்பகுதிக்கு ஐந்நூறு மில்லி யன் ரூபாவுக்கு;

(ஆ) 2014, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2014, டிசெம்பர் 31ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்

பகுதியினுள் வருகின்ற அத்தகைய ஏதேனும் மூன்றுமாத காலப்பகுதிக்கு இருநூற்றைம்பது மில்லியன் ரூபாவுக்கு; அத்துடன்.

(இ) 2015, சனவரி 1ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் அத்தகைய மூன்று மாத காலப்பகுதிக்கு நூறு மில்லியன் ரூபாவுக்கு,

குறைவாகவிராதிருந்தாலொழிய," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "வருமானத்தின் பாதுகாப்புக்குத் தடையாக இருக்குமெனத் திருப்திப் பட்டதன் மேல் அவரது பதிவை, விடயத்துக்கேற்றாற் போல, இல்லாதாக்குதல் வேண்டும் அல்லது இல்லாதாக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வருமானத்தின் பாதுகாப்புக்குத் தடையாக இருக்குமெனத் திருப்திப்பட்டதன் மேல் அவரது பதிவை, விடயத்துக்கேற்றாற் போல, இல்லாதாக்குதல் வேண்டும் அல்லது இல்லாதாக்கலாம் அல்லது அத்தகைய இல்லாதாக்குதல் செய்யப்படுவதற்கு முன்னர் மேலதிக விசாரணைகள் செய்யப்படும்வரை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய பதிவைச் செயலூக்கமற்ற பதிவாக நிரற்படுத்துதல் வேண்டும் அல்லது நிரற்படுத்தலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

“(2அ) ஆணையாளர் தலைமையதிபதி-

(அ) (2)ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் பதிவை இல்லாதாக்குமிடத்து, பரந்தளவில் புழக்கத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள மூன்று நாளாந்தச் செய்தித்தாள்களில் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்களும் பதிவிலக்கங்களும் பற்றிய நிரலொன்றை அவர் வெளியிடச் செய்தல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய பதிவு செயலூக்கமற்றதென முடிபு செய்யுமிடத்து, எந்த ஆட்களின் பதிவு செயலூக்கமற்றதென முடிபுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆட்களின் பெயர்களையும் பதிவிலக்கங்களையும் திணைக்களத்தின் அலுவலக முறையான இணையத்தளத்தில் வெளியிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு வெளியிடப்பட்ட நிரல், 73 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மாதாந்த அடிப்படையில் நாளதுவரையாக்கப்படுதலும் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் “எழுத்திலான அறிவித்தல் மூலம்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “எழுத்திலான அறிவித்தல் மூலம் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம்” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவானது, "எழுத்தில் அறிவித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக,"எழுத்தில் அறிவித்தல் வேண்டும் அல்லது இலத்திரனியல் வழிவகை மூலம் அறிவித்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவு தவிர்ந்த, எங்கெல்லாம் "எழுத்திலான" என்னும் சொல் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் "எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகையிலான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவுக்கான முதலாம் காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்:-

"ஆயின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளும் மற்றும் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (ஊ) என்னும் பந்தியின் (i) ஆம் விடயத்திலும் (ii) விடயத்திலும் குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்புகளும் எவ்வாறிருப்பினும், பின்வருவனவற்றுக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள், அதாவது-

(அ) கொடுப்பனவானது அரசாங்கத்தினால் பொறுக்கப்படுகின்றதும் மேலே (ii) ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறானதுமான ஏதேனும் விசேட கருத்திட்டம்; அல்லது

(ஆ) அத்தகைய வழங்கல்கள், கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட வழங்கல்களாகவிருப்பதுடன் 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்

நுணுக்க அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளினுள் சொல்லப்பட்ட செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தினால் உரிமை கோரப்படுவதற்கு அனுமதிக்கப்படத் தக்கனவாகவுமிருப்பின், மேலே (i)ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத் திட்டம்,

அத்தகைய கருத்திட்டங்களுக்குச் செய்யப்பட்ட பண்டங் களின் அல்லது சேவைகளின் வழங்கலுடன் சம்மந்தப் பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் கொள்வன வின் மீது உள்ளீட்டு வரியை உரிமைகோருவதற்கு அனுமதிக்கப்படலாம்:";

(2) அப்பிரிவின் (13) ஆம் உட்பிரிவில் "இந்நோக்கத் துக்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்கவும், உரிமைகோரப்படுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்க ளுக்குப் பதிலாக "இந்நோக்கத்துக்காக மத்திய வங்கியி னால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்கவும் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி யினால் வழங்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப் பட்ட வழிகாட்டுநெறிகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவது மான உரிமைகோரப்படுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "2013, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2013, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2015, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் ; அல்லது ;" அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(இ) விடயத்திற்கேற்ப, மூன்று மாதகாலப்பகுதிக்காக அத்தகைய வழங்கல்களின் பெறுமதி மூன்று மில்லியன் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்து அல்லது பன்னிரெண்டு மாதகாலப்பகுதிக்காகப் பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து, அத்தகைய பதிவு 2015, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப் பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக இடம்பெற்றிருப்பின்.".

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "எழுத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகை மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 இ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேண்டும்;" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ஈ) 2011, சனவரி 1 ஆந்தேதியிலிருந்து, ஆனால் 2015, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னர் தொடங்கும் காலப்பகுதிக்குப் பன்னிரெண்டு சதவீதமாதல் வேண்டும்;"; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(உ) 2015, சனவரி 1 ஆந்தேதியிலிருந்து தொடங்கும் காலப்பகுதிக்குப் பதினொரு சதவீதமாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவு, அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில் "பயன்படுத்தப்படும் அப்பண்டங்களுக்கும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பயன்படுத்தப்படும் அப்பண்டங்களுக்கும்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) ஏதேனும் காணி அல்லது கட்டிடம் தவிர்ந்த ஏதேனும் சொத்தின் மீதான ஏதேனும் நிதிக்குத்தகை உடன்படிக்கை அல்லது தொழிற்பாட்டுக் குத்தகை உடன்படிக்கை, 2014, ஒக்டோபர் 14 ஆந் தேதிக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையை மீள் அட்டவணைப்படுத்துவதற்கான உடன்படிக்கையொன்றாகவிராது 2014, ஒக்டோபர் 14 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்துகொள்ளப்படின், அத்தகைய உடன்படிக்கையின் கீழான குத்தகை வசதிகளை வழங்குதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 25 ஔ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஔ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 25ஔ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"இலத்திரனியல் தொடர் பாடல்கள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளின் பயன்பாடு.

25ஔ. அமைச்சர், உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் விதப்புரையின்மேல், 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் இலத்திரனியல் தொடர்புகளை அல்லது இலத்திரனியற் பதிவேடுகளைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கின்ற அல்லது வசதிப்படுத்துகின்ற நோக்கத்துக்கான ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "எழுத்திலான" என்னும் சொல்லுக்குப் பதிலாக,"எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகையிலான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில் "எழுத்திலான அறிவித்தல் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான அறிவித்தல் மூலம் அல்லது இலத்திரனியல் வழிவகை மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில் "எழுத்திலான" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "எழுத்திலான அல்லது இலத்திரனியல் வழிவகையிலான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "எழுத்திலான அறிவித்தல் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான அறிவித்தல் மூலம் அல்லது இலத்திரனியல் வழிவகையிலான அறிவித்தல் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில் "எழுத்திலான அறிவித்தலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான அறிவித்தலை அல்லது இலத்திரனியல் வழிவகையிலான அறிவித்தலை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவானது, "எழுத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகை மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவானது, "எழுத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக,"எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகை மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு, "வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி" என்னும் வரைவிலக்கணத்தின் சொல்லமைப்பில் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (அ) வுக்கு நேர்முன்னர் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1) 2011, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக-"; அத்துடன்

(2) பந்தி (ஆ) வை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(2) 2011, ஏப்பிறல் 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப் பகுதிக்காக–

(அ) (25ஆ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பில் தவிர) பின்வரும் சந்தர்ப்பங் களில் ஒரு மாதகாலப்பகுதியொன்று–

(i) எவேரேனுமாள் எளிமையாக் கப்பட்ட சேர்பெறுமதி வரித் திட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள் ளவிடத்தும் (2) ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட அந்நோக்கத்துக்காக ஆணையா ளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறியிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறாகப் பதிவுசெய்யப் பட்ட இனங்காணப்பட்ட கொள் வனவுகாரர் அந்தஸ்து அவருக்கு அளிக்கப்பட்டவிடத்தும்;

(ii) எவரேனுமாள் ஒரு தொழிலைத் தொடங்கியுள்ளவிடத்தும் அல் லது ஒரு கருத்திட்டத்தை ஆரம் பித்துள்ளவிடத்தும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் 22ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரி வின் அல்லது 1996 ஆம் ஆண் டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள்

மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குப் பொறுப்பேற்குமிடத்தும்;

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பிடப்படாத அல்லது ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தின் மேல் காலாண்டு விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிப்பதற்கு விருப்புத் தெரிவித்திருக்கின்ற பதிவு செய்யப்பட்டவோர் ஆள் தொடர்பில், முறையே ஒவ்வோராண்டும் சனவரி முதலாம் நாளன்று, ஏப்பிறல் முதலாம் நாளன்று, யூலை முதலாம் நாளன்று மற்றும் ஒக்டோபர் முதலாம் நாளன்று தொடங்குகின்ற மூன்றுமாத காலப்பகுதியொன்று;".

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை, அதன் II ஆம் பாகத்தில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகிறது:- முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தைத் திருத்துதல்.

(1) முதன்மைச் சட்டவாக்கத்தின் II ஆம் பாகத்தின் தலைப்பு, "2004, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(அட்டவணைக்கான அடுத்துப்பின்னரான திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்ட பயனுறும் தேதிகளுக்கமைய) 2004, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக:-" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பாகத்தின் பந்தி (அ), (XXV) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(XXVI) அத்தகைய உற்பத்திப்பொருட்களின் உற்பத்தியின்மீது மதுவரிக்கட்டளைச்சட்டத்தின் கீழ் மதுவரிக்கு அல்லது இறக்குமதியின் மீது சுங்கத் தீர்வைக்கும் மேல்வரிக்கும் அமைந்ததாகவுள்ள இறக்குமதி செய்யப்பட்டு அல்லது உற்பத்திசெய்யப் பட்டு துணைப்பொருளாக வழங்கப்படும் ஈதைல் அற்ககோல்.";

(3) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில்-

(அ) அப்பாகத்தின் (ii) ஆம் விடயத்தின் (ஆ) என்னும் பந்தியின் (அ) என்னும் விடயத்தின் (ii) ஆம் உப விடயத்தில் "2012, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அத்தகைய உடன்படிக்கை 2014, ஒக்டோபர் 24 ஆந்தேதியன்று அல்லது அதன் முன்னர் செய்து கொள்ளப்படின், 2012, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பாகத்தின் (ii) ஆம் விடயத்தின் (ஆ) என்னும் உட்பந்தியின் (அ) என்னும் விடயத்தின் (iii) ஆம் உபவிடயத்தில் "2013, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக் கும் பதிலாக, "அத்தகைய உடன்படிக்கை 2014, ஒக்டோபர் 24 ஆந்தேதியன்று அல்லது

அதன்முன்னர் செய்துகொள்ளப்படின், 2013, சனவரி 1ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அப்பாகத்தின் (ii) ஆம் விடயத்தின் (ஆ) என்னும் உட்பந்தியின் (ஆ) என்னும் விடயத்தில் "பின்வருவனவற்றுக்கான குத்தகைக்குவிடுதல் வசதிகளின் ஏற்பாடு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய உடன்படிக்கை 2014, ஒக்டோபர் 24 ஆந்தேதியன்று அல்லது அதன்முன்னர் செய்து கொள்ளப்படின், ஏதேனும் அத்தகைய உடன்படிக்கையின்கீழ் குத்தகைக்குவிடுதல் வசதிகளின் ஏற்பாடு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஈ) அப்பாகத்தின் (ii) ஆம் விடயத்தின் (ஆ) என்னும் உட்பந்தியின் (இ) என்னும் விடயத்தில் "பந்தி (இ) இன்" என்னும் சொற்களுக்கும் பதிலாக, "அத்தகைய உடன்படிக்கை 2014, ஒக்டோபர் 24 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் செய்து கொள்ளப்படின், பந்தி (இ) இன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(உ) அப்பாகத்தின் (ர) என்னும் உட்பந்தியின் (ஏ)ஆம் விடயத்தின் (ஆ) என்னும் உபவிடயத்தில்,

(i) "பண்டங்களை வழங்குதல்"; என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பண்டங்களை வழங்குதல்"; அல்லது

(ii) (ர) என்னும் உட்பந்தியின் விடயம் (ஆ) என்பதன் உபவிடயம் (ஆ) வை உடன டுத்துப் பின்வரும் புதிய உபவிடயத் தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) ஏதேனும் காணி அல்லது கட்டிடம் தவிர்ந்த ஏதேனும் சொத்தின் மீதான ஏதேனும் நிதிக் குத்தகை உடன்படிக்கை அல்லது தொழிற்பாட்டுக் குத்தகை உடன்படிக்கை, 2014, ஒக்டோபர் 14 ஆந் தேதிக்கு முன்னர் செய்து கொள்ளப் பட்ட ஏதேனும் உடன்படிக் கையை மீள் அட்டவணைப் படுத்துவதற்கான உடன் படிக்கையொன்றாகவிராது 2014, ஒக்டோபர் 14 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்துகொள்ளப் படின், அத்தகைய உடன்படிக் கையின் கீழான குத்தகை வசதி களை வழங்குதல்;";

(ஊ) அப்பாகத்தின் (xi) ஆம் விடயத்தில் "கருத் திட்டம் மேற்கூறப்பட்ட வழங்குகையுடன், குத்தகையுடன் அல்லது வாடகையுடன் புற நீங்கலாகத் தொடர்புபட்டதாகவிருக்குமிடத் தும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கருத்திட்டம் மேற்கூறப்பட்ட வழங்குகையு டன், குத்தகையுடன் அல்லது வாடகையுடன் புறநீங்கலாக அல்லது பகுதியளவில் தொடர்புபட்டதாகவிருக்குமிடத்தும்" என் னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(எ) அப்பாகத்தின் (xiii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(xiii) இறக்குமதி செய்யப்பட்ட -

(அ) பதனிடப்படாதவெட்டு மரக் குற்றிகளும், கப்பல்களும், அல்லது பிரம்புகளும்; அல் லது

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் விசேட வியாபார அறவீட் டுக்கு அமைந்த எவையேனும் பண்டங்கள்,

விற்பனைக்காக இசைவாக்கப்படு வதனைத் தவிர ஏதேனும் பதனிடு கையின்றி விற்கப்படுகின்ற நிபந் தனைக்கமைய அத்தகைய ஏதேனும் பொருள்;";

(ஏ) அப்பாகத்தின் (xxxi) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(xxxi) 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின்கீழ் தொலைத்தொடர்பு அறவீட்டுக்கு பொறுப்பான தொலைத்தொடர்புச் சேவைகளின தும் அச்சட்டத்தில் தொலைத்

தொடர்புச் சேவைகளின் வரை விலக்கணத்தில் அத்தகைய பொறுப்பிலிருந்து குறிப்பாகத் தவிர்க்கப்பட்ட சேவைகளினதும் வழங்குகை (2004, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும்);";

(4) அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில்:-

(அ) அப்பந்தியின் (XXX) ஆம் விடயத்தை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(XXX) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய -

(அ) 2015, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட அத்தகைய இறக்குமதியின் மீது இருபத்தையாயிரம் ரூபாவுக்கும்; அத்துடன்

(ஆ) 2015, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு அத்தகைய இறக்குமதியின் மீது ஐம்பதினாயிரம் ரூபாவுக்கும்,

மேற்படாத பெறுமதியைக் கொண்ட ஒரு தொழில் தொடர்பான மாதிரிகளின் வழங்குகை;"; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (xxxvii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(xxxviii) இலங்கைத் துறைமுக அதிகார சபையின் துறைமுகங்களினுள் புறநீங்கலாகப் பயன்படுத்தப் படுவதற்கு இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் எந்திரத் தொகுதி, சாதனம் அல்லது உதிரிப்பாகங்களின் வழங்குகை".

(5) அப்பாகத்தின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஔ) எந்த மோட்டார் வாகனம் மீது உள்ளீட்டு வரி உரிமைகோரப்பட்டிருந்ததோ அந்த மோட்டார் வாகனம் மீது குத்தகைக்கு எடுத்தவரினால் அதன் மீள உடைமையைப்பெற்ற பின்னர் கையுதிர்க்கப்படுகின்ற 2014, ஒக்டோபர் 25 ஆந் திகதிக்கு முன்னதாக செய்யப்பட்ட நிதிசார் குத்தகைக்கு விடுதல் உடன்படிக்கையின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் தவிர்ந்த, 2014, ஒக்டோபர் 25 ஆந் தேதியிலிருந்து பின்வருவனவற்றின் இறக்குமதி அல்லது வழங்குகை:-

(அ) (i) ஏதேனும் அத்தகைய வாகனத்தின் உற்பத்தி மீதான உற்பத்தித் தீர்வைக்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய வாகனத்தின் அல்லது மோட்டார் வாகனத்தின் இறக்குமதி மீது 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தித் தீர்வைக்கு பொறுப்

பானதும் சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்கள் என்பவற்றின் கீழ் இணங்காணப்பட்டவையுமான மோட்டார் வாகனங்கள்;

(ii) 2014, ஒக்டோபர் 25 ஆந்தேதிக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்படின் அல்லது உற்பத்தி செய்யப்படின் அதன் இறக்குமதி அல்லது உற்பத்தி மீதான அதே தீர்வைக்கு வேறுவகையால் பொறுப்பாகவிருக்கும் 2014, ஒக்டோபர் 25 ஆந்தேதியன்றுள்ளவாறாக விற்கப்படாதுள்ள ஏதேனும் மோட்டார் வாகனம்,

(ஆ) 2014 ஒக்டோபர் 25ஆந் திகதியின் பின்னர் இறக்குமதி செய்யப்படின் அல்லது உற்பத்தி செய்யப்படின், 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தித் தீர்வைக்கும் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் மேல்வரிக்கும் பொறுப்பானதும் சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்கள் என்பவற்றின் கீழ் இணங்காணப்பட்டனவுமான சிகரெட்டுகளின் இறக்குமதி அல்லது உற்பத்தி மீதான அதே தீர்வைக்கு பொறுப்பாகவிருக்கின்ற 2014, ஒக்டோபர் 25 ஆந் திகதியில் விற்கப்படாதுள்ள சரக்குகளிலுள்ள சிகரெட்டுகள் உட்பட அவற்றின் உற்பத்தி அல்லது இறக்குமதி மீதான தீர்வைக்குப் பொறுப்பான சிகரெட்டுகள்; அல்லது

(இ) 2014, ஒக்டோபர் 25 ஆந் தேதியன்றுள்ள வாறு விற்கப்படவுள்ளதும், அதனை இறக்குமதி செய்வதன் மீது அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்வதன் மீது மதுவரி (விசேட ஏற்பாடுகள்) தீர்வைக்கு அமைந்ததாகவிருந்திருக்கக்கூடியதும், 2014, ஒக்டோபர் 25 ஆந்தேதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டதுமான அல்லது உற்பத்தி செய்யப்பட்டதுமான மதுபானமுட் பட, இறக்குமதியின் மீது அல்லது அதனை உள்நாட்டில் உற்பத்தி செய்வதன் மீது மதுவரி (விசேட ஏற்பாடுகள்) தீர்வைக் கமைந்ததாகவுள்ளதும் சுங்க நோக்கங்க ளுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட பண்டங்க ளின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்கள் என்பவற்றின்கீழ் இனங்காணப் பட்டதுமான மதுபானம்;".

*2014 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் 13ஆம் பிரிவுக்கான திருத்தம்.*

**26**. 2014 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தின் 13ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தில் உட்புகுத்தப்பட்ட திருத்தம், அப்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(இ) "சிரேட்ட வரிமதிப்பீட்டாளர்" என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் காணப்படும் இடங்களி லெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "பிரதி ஆணையா ளர் அல்லது சிரேட்ட பிரதி ஆணையாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்."

*செல்லுபடி யாக்கல்.*

**27**. 2015, சனவரி 1 ஆந்தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப்பகுதியின்

போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதிவரியைச் சேகரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனுமாள், உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரிச் சேகரிப்பு செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப் படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும்:

ஆயின், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள் அத்தகைய காலப்பகுதி யின் போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக ஏதேனும் சேகரிக்கப்பட்ட வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாததுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்